ABSTRACT

Forests – Dindigul District - Nilakottai Taluk – 23, Musuvanuthu Village - Musuvanuthu Forest Block - Survey Number 481/1, an extent of 105.93.5 Hectare - Declaration as Reserved Forest under section 16 of Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) – Notification - Approved – Orders - Issued.

Environment, Climate Change – Forest (FR.14) Department

G.O.(Ms) No.182 **Dated: 18.09.2022**

சுபகிருது, ஐப்பசி–1

திருவள்ளுவர் ஆண்டு–2053

Read:

1. G.O.(Ms)No.26, Environment and Forest (FR.14) Department, Dated: 27.02.2019.
2. Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai-15. Letter No.TS2/27087/2021, Dated: 25.03.2022.

=======

ORDER:

The proposal of the Principal Chief Conservator of Forests in his letter second read above for declaration of an area of 105.93.5 Hectare situated in Survey Number 481/1 of 23, Musuvanuthu Village, Musuvanuthu Forest Block, Nilakottai Taluk, Dindigul District as Reserved Forest under Section 16 of the Tamil Nadu Forest Act, 1882, is approved and accordingly the appended Notifications will be published in English in the Tamil Nadu Government Gazette, Dated 09.11.2022 and in Tamil in the Dindigul District Gazette, Dated 23.11.2022.

2. The Works Manager, Government Central Press, Chennai-1 is requested to ensure that the Notifications are published in the Tamil Nadu Government Gazette, Dated 09.11.2022. On receipt of Notifications, the Branch Manager, Government Branch Press, Madurai is requested to take action to publish them in the Dindigul District Gazette.

3. They shall ensure that after publication, printed copies of said Notification in English and Tamil are communicated to the Officers as shown in the Annexure to this order.

..2.

Verified RedEstado ™

4. The District Collector, Dindigul and the Principal Chief Conservator of Forests are requested to watch the publication of the Notifications and bring to the notice of the Government, delay if any, in publication.

(BY ORDER OF THE GOVERNOR)

SUPRIYA SAHU
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

To
The Works Manager,
Government Central Press, Chennai – 1 (w.e).
The Branch Manager,
Government Branch Press, Madurai (w.e).
The Additional Chief Secretary /
Commissioner of Land Administration, Chennai – 5 (w.e).
The Principal Chief Conservator of Forests
(Head of Forest Force), Chennai – 32.(w.e)
The District Collector, Dindigul.(w.e.)
The Chief Conservator of Forests Dindigul.(w.e)
The District Forest Officer, Dindigul.(w.e)
The Forest Settlement Officer, Dindigul.(w.e)

Copy to:-
The Private Secretary to Additional Chief Secretary to Government,
Environment, Climate Change and Forest Department, Chennai-9. (w.e)
Revenue and Disaster Management (LD.4) Department, Chennai – 9. (w.e)
Law (Opinion) Department, Chennai – 9. (w.e)
Tamil Development and Information (Translation) Department, Chennai-9. (w.e)
Stock File/Spare Copy.

//FORWARDED BY ORDER//

V.S Swamy 19/10/2022
Section Officer
19/10/2022

Verified RealEstate ™

Annexure to G.O.(Ms)No. 182,

Environment, Climate Change and Forest (FR.14) Department, Dated 18.10.2022

Sl. No.	Designation and Address of the Officers	English	Tamil
1.	The Additional Chief Secretary to Government, Environment, Climate Change and Forest Department, Chennai – 9.	2	2
2.	The Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai -32.	3	3
3.	The District Collector, Dindigul.	2	2
4.	The Chief Conservator of Forests, Dindigul.	5	5
5.	The District Forest Officer, Dindigul.	12	12
6.	The Forest Settlement Officer, Dindigul	8	8

SUPRIYA SAHU
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

//True Copy//

Section Officer

19/10/2022

Verified RealEstate

APPENDIX.

NOTIFICATION

In exercise of the powers conferred by section 16 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby declares that the area, the boundaries of which are specified in the Schedule below, as reserved forest with effect on and from 18.04.2023.

THE SCHEDULE.

Name of the District	Dindigul
Name of the Taluk	Nilakottai
Number and Name of the Village	23, Musuvanuthu
Name of the Forest Block	Musuvanuthu Forest Block
Survey Number	481/1
Extent of the Forest Block	105.93.5 Hectare

BOUNDARIES.

North.- Generally, the northern boundary line starts from the tri-junction points of Survey Numbers 481/1, 481/2 and 409, No.23, Musuvanuthu Village, runs towards the east side along the southern boundary of Survey Numbers 409, 375, 374, 373, 372, 362 and 361 of No.23, Musuvanuthu Village and till it reaches the tri-junction point of Survey Numbers 361, 334 and 481/1 of No.23, Musuvanuthu Village.

East.- Thence, the eastern boundary runs towards southern side along the western boundary of Survey Numbers 334, 333, 332, 331, 330, 329 and 326 of No.23, Musuvanuthu Village and till it reaches the tri-juntion point of Survey Numbers 326, 483 and 481/1 of No.23, Musuvanuthu Village.

South.- Thence, the boundary runs towards west side along the northern boundary of Numbers 483, 482 and 324 of No.23, Musuvanuthu Village, No.18, Sithargalnatham Village, No.28, Kullichettipatti Village and No.27. Bodigoundanpatti Village and till it reaches the tri-junction point of Survey Numbers 481/1, 481/2 of No.23 Musuvanuthu Village and No.27, Bodigoundanpatti Village.

West.- Thence, the boundary runs towards east and northern side along the south and eastern boundary of Survey Numbers 481/2 of No.23, Musuvanuthu Village and till it reaches the starting point.

Verified RealEstate™

Enclosure.- Survey Number 481/3 to an extent of 0.00.50 Hectare is situated within proposed Block is excluded and free from reservation.

RIGHTS ADMITTED

No Rights admitted in the Forest Block.

SUPRIYA SAHU
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

//True Copy//

V.S Swarna 19/10/2022
Section Officer
19/10/2022

Verified RedIEstate™

சுருக்கம்

வனம் – திண்டுக்கல் மாவட்டம் – நிலக்கோட்டை வட்டம் – 23, முசுவனூத்து கிராமம், முசுவனூத்து வன வட்டாரம் – நில அளவை எண்.481/1–ல் உள்ள 105.93.5 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 14) துறை

அரசாணை (நிலை) எண்.182

நாள்: 18.10.2022
சுபகிருது, ஐப்பசி–1
திருவள்ளுவர் ஆண்டு–2053

படிக்க.:

1. அரசாணை (நிலை) எண்.26, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14) துறை, நாள். 27.02.2019
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.டி எஸ்2/27087/ 2021, நாள். 25.03.2022.

=======

ஆணை :

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், 23, முசுவனூத்து கிராமம், முசுவனூத்து வன வட்டாரம், நில அளவை எண்.481/1–ல் உள்ள 105.93.5 எக்டர் நிலம் தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைக்க கோரும் அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் நாள் 09.11.2022–ல் ஆங்கிலத்திலும், திண்டுக்கல் மாவட்டம் அரசிதழ் நாள் 23.11.2022–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 09.11.2022-ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடுமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளருக்கு அறிவுறுத்துமாறு அரசு மைய அச்சக பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை -1. (இணைப்புடன்).
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை.(இணைப்புடன்).
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை – 5 (இணைப்புடன்).
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32 (இணைப்புடன்).
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல். (இணைப்புடன்).
தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல். (இணைப்புடன்).
மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல்.(இணைப்புடன்).
வன நிர்ணய அலுவலர், திண்டுக்கல்.(இணைப்புடன்).

..3.

Verified RedEstate

நகல்:-

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை-9. (இணைப்புடன்).
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-4) துறை,
சென்னை-9 (இணைப்புடன்).
சட்டத்(Opinion) துறை, சென்னை-9 (இணைப்புடன்).
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்(Translation) துறை, சென்னை-9
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பி.எஸ்.சிவன்னா 19/10/2022
பிரிவு அலுவலர்
19/10/2022

Verified RedEstate™

அரசாணை (நிலை) எண்.182,

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை,

நாள். 18.10.2022–ன் இணைப்பு

வரிசை எண்.	பதவி மற்றும் அலுவலக முகவரி	ஆங்கிலம்	தமிழ்
1	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை -9.	2	2
2	முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–32.	3	3
3	மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்.	2	2
4	தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல்.	5	5
5	மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல்.	12	12
6	வன நிர்ணய அலுவலர், திண்டுக்கல்.	8	8

சுப்ரியா ஸாஹூ

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

தி.ஏஸ்.சாவ்ரியா 19/10/2022

பிரிவு அலுவலர்

19/10/2022

Verified @ RealEstate

பிற்சேர்க்கை.

அறிவிக்கை

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்5/1882) 16–ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப் பகுதியை 18.04.2023ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

விவர அட்டவணை.

மாவட்டத்தின் பெயர்	:	திண்டுக்கல்
வட்டத்தின் பெயர்	:	நிலக்கோட்டை
கிராமத்தின் எண் மற்றும் பெயர்	:	23, முசுவனூத்து
வன வட்டாரத்தின் பெயர்	:	முசுவனூத்து வனவட்டாரம்
நில அளவை எண்	:	481/1
வன வட்டாரத்தின் பரப்பு	:	105.93.5 எக்டேர்

நாற்புற எல்லைகள்.

வடக்கு.– பொதுவாக இவ்வன வட்டாரத்தின் வடக்கு எல்லையானது எண்.23, முசுவனூத்து கிராமம் நில அளவை எண்கள்.481/1, 481/2 மற்றும் 409 சந்திக்கும் முச்சந்திப்பில் தொடங்கி எண்.23, முசுவனூத்து கிராமம் நில அளவை எண்கள்.409, 375, 374, 373, 372, 362 மற்றும் 361 ஆகியவை மற்றும் எண்.23, முசுவனூத்து கிராமம் நில அளவை எண்கள்.361, 334 மற்றும் 481/1 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடையும் வரையில் தெற்கு எல்லை நெடுகிலும், கிழக்கு நோக்கிச் செல்கிறது.

Verified © RealEstate ™

கிழக்கு.– பின்னர், இந்த கிழக்கு எல்லையானது எண்.23, முசுவனூத்து கிராமம் நில அளவை எண்கள். 334, 333, 332, 331, 330, 329 மற்றும் 326 மற்றும் எண்.23, முசுவனூத்து கிராமம் நில அளவை எண்கள். 326, 483 மற்றும் 481/1 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடையும் வரையில் மேற்கு எல்லை நெடுகிலும் தெற்கு நோக்கி செல்கிறது.

தெற்கு.– பின்னர், இந்த எல்லையானது, எண்.23, முசுவனூத்து கிராமம் நில அளவை எண்கள். 483, 482, 324, எண்.18, சித்தர்கள்நத்தம் கிராமம், எண்.28, குல்லிசெட்டிபட்டி கிராமம், மற்றும் எண்.27 போடிகவுண்டன்பட்டி கிராமம் மற்றும் எண்.23, முசுவனூத்து கிராமம் நில அளவை எண்கள்.481/1, 481/2 மற்றும் எண்.27, போடிகவுண்டன்பட்டி கிராமம் முச்சந்திப்பை அடையும் வரையில் வடக்கு எல்லை நெடுகிலும் மேற்கு நோக்கிச் செல்கிறது.

மேற்கு.– பின்னர், இந்த எல்லையானது அதன் துவக்கப் புள்ளியை அடையும் வரையில் எண்.23, முசுவனூத்து நில அளவை எண்.481/2ன் தெற்கு மற்றும் கிழக்கு எல்லை நெடுகிலும் கிழக்கு மற்றும் வடக்கு நோக்கிச் செல்கிறது.

உள்ளடக்கம்:

அறிவிக்கை செய்ய கருதப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் இருந்து இவ்வனப்பரப்பில் உள்ளடக்கியுள்ள நில அளவை எண்.481/3–இல் கண்ட 0.00.50 எக்டேர் நிலப்பரப்பிற்கு விலக்களிக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்ட உரிமைகள்

இவ்வனவட்டாரத்தில் உரிமைகள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

வி.முஸ்.சுவர்ணா
பிரிவு அலுவலர் 19/10/2022
19/10/2022

Verified @ RealEstate™